**பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர்கள் இலங்கைக்கான விஜயத்தை நிறைவுசெய்துள்ளனர்**

**2020 பெப்புருவரி 08**

அலுவலர் குழுவின் பின்னரான பத்திரிகை வெளியீடானது நாடொன்றிற்கான விஜயமொன்றினைத் தொடர்ந்து பூர்வாங்க கண்டுபிடிப்புக்களை/ பெறுபேறுகளைத் தெரிவிக்கின்ற ப.நா.நிதியத்தின் அலுவலர் குழுக்களின் கூற்றுக்களை உள்ளடக்கும். இக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ப.நா.நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி அது ப.நா.நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென அவசியமில்லை. இந்த அலுவலர் குழு நிறைவேற்றுச் சபை கலந்துரையாடலுக்கு வழிவகுக்கமாட்டாது.

- கடந்த ஏப்பிறலில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்து பொருளாதாரமானது மீட்சிபெற்று வருவதுடன் 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 3.7 சதவீதமாக எறிவுசெய்யப்பட்டுள்ளது.
- கொள்கை முன்னுரிமைகளை உறுதிநிலைப்படுத்தல், போட்டித்தன்மையைப் பலப்படுத்தல் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியைத் தூண்டுதல் என்பவற்றை மேற்கொள்வதற்கு தீர்க்கமான கட்டமைப்புசார் மற்றும் நிறுவன ரீதியான சீராக்கங்கள் தேவைப்படுகின்றன.
- உயர்ந்த மட்டத்திலான படுகடன் மற்றும் மீள்நிதியிடல் தேவைப்பாடுகள் என்பவற்றிற்கு மத்தியில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றம் சந்தை நம்பிக்கை என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்கு இறை முன்மதி இன்றியமையாததாகவிருக்கின்றது.

மனுவெல்லா கொறேட்டி தலைமையிலான ப.நா.நிதிய அலுவலர் குழுவொன்று புதிய நிர்வாகத்துடன் சந்திப்பினை மேற்கொள்வதற்கும் அதன் கொள்கை நிகழ்ச்சிநிரல்களைக் கலந்துரையாடுவதற்காகவும் 2020 சனவரி 29 – பெப்புருவரி 07 வரையான காலப்பகுதியில் கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தது. விஜயத்தின் இறுதியில் திருமதி கொறேட்டி பின்வருமாறு அறிக்கையை வெளியிட்டார்:

“ப.நா.நிதியத்தின் அலுவலர் குழுவானது இலங்கை அதிகாரிகளுடன் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நாட்டின் பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சிநிரல்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது. நாட்டின் உயர்ந்த மட்டத்திலான பொதுப்படுகடன் மற்றும் மீள்நிதியிடல் தேவைப்பாடுகளுக்கு மத்தியில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதானது இறைத்திரட்சிப்படுத்தல், காத்திரமான நாணயக் கொள்கை மற்றும் பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கான நிலைத்திருக்கக்கூடிய முயற்சிகள் என்பவற்றினைத் தேவைப்படுத்துகின்றது. நாட்டின் வளர்ச்சியின் உள்ளார்ந்த தன்மையை அதிகரிப்பதற்கும் அனைத்தையுமுள்ளடக்கிய தன்மையை ஊக்குவிப்பதற்கும் உயர்வான கட்டமைப்புசார் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் இன்றியமையாததாகக் காணப்படுகின்றன.”

“கடந்த ஏப்பிறலில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலிலிருந்து பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றது. உண்மை உள்நாட்டுப் பொருளாதார உற்பத்தி வளர்ச்சி 2019இல் 2.6 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மீட்சியானது ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தயாரிப்புத் துறையின் திடமான செயலாற்றம் மற்றும் சுற்றுலாத்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளிலானதொரு மீட்சி என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டிருந்தது. விரைவாகக் கிடைக்கப்பெறும் குறிகாட்டிகள் தொடர்ந்து மேம்பாடடைவதுடன் சுற்றுலாத்துறையின் மீட்சி மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றின் மீது புதிய கொரோனா வைரஸ் மட்டுப்படுத்தப்பட்ட எதிர்க்கணியத் தாக்கத்தை மாத்திரம் கொண்டிருக்கும் என்ற எடுகோளின் அடிப்படையில் 2020இல் பொருளாதார வளர்ச்சியானது 3.7 சதவீதமாக மீட்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் இலக்கிற்கு இணங்கிச்செல்லும் வகையில் பணவீக்கமானது ஏறத்தாழ 4.5 சதவீதமான மட்டத்தில் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. 2019இல் கடுமையான இறக்குமதிச் சுருக்கத்தைத் தொடர்ந்து நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 3 சதவீதத்திற்கு விரிவாக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.”

“மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.3 சதவீதமாகப் பற்றாக்குறை பதிவுசெய்யப்பட்டதுடன் நலிவான வருவாய்ச் செயலாற்றம் மற்றும் விஞ்சிய செலவினத்தினால் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்ப மிகை இலக்கு 2019 இல் ஓர் கணிசமான தொகையினால் எய்தப்படவில்லை என்பதை பூர்வாங்கத் தரவுகள் குறிக்கின்றன. வருகையின்போது அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டவாறு தற்போதைய கொள்கைகளின்படி புதிதாக நடைமுறைபடுத்தப்பட்ட வரிக் குறைப்புகள் மற்றும் விலக்குகள், உள்நாட்டு நிலுவைகளின் தீர்த்தல் மற்றும் 2019இல் பிற்போடப்பட்ட மூலதன செலவினம் என்பவற்றினால் ஆரம்பப் பற்றாக்குறை 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.9 சதவீதமாக மேலும் விரிவடையலாம். நடுத்தர காலத்தில் படுகடன் நிலைத்திருக்கும்தன்மை மீதான இடர்நேர்வுகள் மற்றும் அதிகமான மீள்நிதியிடல் தேவைகள் என்பவற்றைக் கருத்திற்கொள்ளும்போது, இறைத் திரட்சியை முன்னெடுப்பதற்கான புதுப்பிக்கப்பட்ட முயற்சிகள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு அவசியமாகும். அரச நிர்வாகத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் அரசிறைத் திரட்டலின் வலுப்படுத்தல் என்பவற்றிற்கான வழிமுறைகள் உயர் பொதுப் படுகடனை குறைப்பதற்கு உதவும் அதேவேளையில் அவசியமான சமூக மற்றும் முதலீடு தேவைகளுக்கான பரப்பினைத் தக்கவைத்துக் கொள்ள உதவும். இறை விதிகளை வலுப்படுத்துவதற்குப் பொருத்தமான சட்டவாக்கத்தை விரைவுபடுத்துவது கொள்கை கடப்பாடுகளை உறுதிநிலைப்படுத்துவதுடன், நம்பிக்கையை மீள்நிறுத்தி நடுத்தர காலத்தில் நிலைத்திருக்கும்தன்மையைப் பாதுகாக்கும்.”

“ஓர் முன்னெச்சரிக்கையான மற்றும் தரவு சார்ந்த நாணயக் கொள்கையை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் பின்பற்றவேண்டும் என்பதுடன் தோற்றம்பெற்றுவரும் பேரண்டப்பொருளாதார நிலைமைகளுக்கேற்ப வீதங்களை திருத்துவதற்கு தயாராக இருக்கவேண்டும். சனாதிபதி தேர்தல் மற்றும் அறிவிக்கப்பட்ட வரிக் குறைப்புக்களுக்குப் பின்னரான சந்தை அழுத்தங்களுக்கு மத்தியில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குக் கீழ் தேறிய பன்னாட்டு ஒதுக்கு 2019 திசெம்பர் இறுதியிலான இலக்கினைவிட ஐ.அ.டொலர் 100 மில்லியன் குறைவாகக் காணப்பட்டது. எனினும், அதன்பின்னர் நிலைமைகள் உறுதியடைந்துள்ளன. ஓர் நெகிழ்ச்சியான செலாவணி வீதத்தின் கீழ் அதிர்வுகளுக்கெதிரான தாக்குப்பிடிக்கும்தன்மையைப் பாதுகாப்பதற்கு ஒதுக்குக் காப்பினை மீளக்கட்டியெழுப்புவதற்கான புதுப்பிக்கப்பட்ட முயற்சிகள் தேவைப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனம் மற்றும் ஆளுகையை மேலும் வலுப்படுத்துவதற்கும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த

பணவீக்க இலக்கிடலை மேற்கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கும் பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகளுக்கு ஒத்திசைவான மத்திய வங்கி சட்டத்தின் ஒப்புதலளித்தல் ஓர் இன்றியமையாத படிக்கட்டாகும்.''

''குறிப்பாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிற்கு மத்தியில் பாதிப்பிற்குள்ளாகக்கூடிய சில தன்மைகள் காணப்படுகின்ற போதிலும் நிதியியல் முறைமை பரந்தளவில் உறுதியாகக் காணப்படுகின்றது. நிதியியல் இடையீட்டில் விரும்பத்தக்கதல்லாத இடையூறுகள் மற்றும் வினைத்திறனின்மையைத் தவிர்ப்பதற்காக கடன்வழங்கல் வீதங்களின் மீதான உச்சவரம்பு மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கடன் மீள்செலுத்துதலின் சட்ட ரீதியான காலதாமதம் என்பன தற்காலிகமானதாக இருக்க வேண்டும். வைப்பை ஏற்கும் நிதியியல் நிறுவனங்களிற்கான ஒழுங்குபடுத்தல், மேற்பார்வையிடல் மற்றும் தீர்வுகாணுதல் கட்டமைப்புக்களை உறுதிப்படுத்தல் மற்றும் இணங்குவித்தல் நோக்குடன் வங்கித்தொழில் சட்டத்தை நவீனமயமாக்குதலானது நிதியியல் உறுதித்தன்மையைப் பாதுகாப்பதற்கு உதவும்.''

''இலங்கையின் பொருளாதார உள்ளார்ந்த வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதுடன் சிறந்த சமூகம் சார்ந்த உள்ளடங்கலைப் பேணிக் கொள்வதற்கும் வளர்ச்சியை மேம்படுத்தும் கட்டமைப்புச் சீர்திருத்தங்களை அதிகாரிகள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை வலுவான வர்த்தக அடிப்படையில் தொழிற்படுவதனை இயலுமைப்படுத்துவதற்கு அந்நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்தும் அதிகாரிகளின் திட்டங்களை இக்குழு வரவேற்கின்றது. இத்திட்டங்கள், குறிப்பாக வலுத் துறையில், ஆளுகை மற்றும் வெளிப்படைத்தன்மை, ஊழலைச் சமாளிப்பதற்கான புதுப்பிக்கப்பட்ட முயற்சிகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக வெளிப்படையான கடப்பாடொன்றினால் ஆதரவளிக்கப்பட வேண்டும். வியாபாரச் சூழலை மேம்படுத்தல், திறந்த வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் காலநிலை மாற்றத்திலிருந்தான சவால்களை எதிர்கொள்ளுதல் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகளை நீடித்துநிலைத்திருக்கும் வகையில் உறுதிப்படுத்தல் என்பவற்றிற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவைப்படுகின்றன. பெண்களின் அதிகளவிலான தொழிற்படைப் பங்கேற்பு, சமூக பாதுகாப்பின் மேம்படுத்தல்கள் மற்றும் கல்வி மற்றும் திறன்களில் மேலதிக முதலீடு என்பவற்றிலிருந்து இலங்கை அநுகூலங்களைப் பெற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கின்றது.''

குழுவானது சனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தர, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யு. டி. லக்ஷ்மன், திறைசேரி செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல, மூத்த பிரதி ஆளுநர் பி. என். வீரசிங்க, ஏனைய அரச அலுவலர்கள், வியாபாரச் சமூகத்தினரின் பிரதிநிதிகள், உள்ளூர் சமூகம் மற்றும் பன்னாட்டுப் பங்காளர்கள் ஆகியோரைச் சந்தித்திருந்தது.

## இலங்கை: தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகள்

| | 2016 | 2017 | 2018 | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6ஆவது வி.நி.வ. மீளாய்வு | மதிப்பிடப் பட்டது | 6ஆவது வி.நி.வ. மீளாய்வு | எறிவுசெய்யப் பட்டது |
| **வெளியீடு** | | | | | | | |
| உண்மை மொ.உ.உ வளர்ச்சி (%) | 4.5 | 3.4 | 3.2 | 2.7 | 2.6 | 3.5 | 3.7 |
| **விலைகள்** | | | | | | | |
| பணவீக்கம் (சராசரி, %) 1/ | 4.0 | 6.6 | 4.3 | 4.4 | 4.3 | 4.8 | 4.8 |
| **மத்திய அரச நிதிகள்** | | | | | | | |
| அரசிறையும் கொடைகளும் (% மொ.உ.உ) | 14.1 | 13.7 | 13.4 | 12.8 | 12.2 | 13.9 | 11.3 |
| செலவினம் (% மொ.உ.உ) | 19.5 | 19.2 | 18.6 | 18.6 | 18.4 | 19.2 | 19.2 |
| ஆரம்ப நிலுவை (% மொ.உ.உ) | -0.2 | 0.0 | 0.6 | 0.2 | -0.3 | 0.7 | -1.9 |
| ஒட்டுமொத்த நிலுவை (% மொ.உ.உ) | -5.3 | -5.5 | -5.3 | -5.7 | -6.2 | -5.3 | -7.9 |
| மத்திய அரச படுகடன் (% மொ.உ.உ) | 79.0 | 77.4 | 83.3 | 83.2 | 84.2 | 82.4 | 84.6 |
| பொதுப் படுகடன் (% மொ.உ.உ) 2/ | 84.1 | 82.7 | 90.0 | 89.9 | 91.0 | 89.2 | 91.4 |
| **பணம் மற்றும் கொடுகடன்** | | | | | | | |
| விரிந்த பணம் (% மாற்றம்) | 18.4 | 16.7 | 13.0 | 7.0 | 7.0 | 10.6 | 10.3 |
| தனியார் துறைக்கான கொடுகடன் (% மாற்றம்) | 21.6 | 14.7 | 15.9 | 5.7 | 4.5 | 10.7 | 10.1 |
| **சென்மதி நிலுவைகள்** | | | | | | | |
| நடைமுறைக் கணக்கு (% மொ.உ.உ) | -2.1 | -2.6 | -3.2 | -2.6 | -2.5 | -2.8 | -2.9 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (% மொ.உ.உ) | 0.8 | 1.5 | 1.7 | 1.7 | 1.4 | 1.7 | 1.4 |
| ஒதுக்குகள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | 6,019 | 7,959 | 6,919 | 8,168 | 7,642 | 9,120 | 8,190 |
| ஒதுக்குகள் (இறக்குமதி மாதங்கள்) | 2.8 | 3.6 | 3.4 | 3.6 | 3.4 | 3.8 | 3.4 |
| வெளிநாட்டுப் படுகடன் (% மொ.உ.உ) | 56.3 | 57.5 | 58.8 | 63.8 | 63.9 | 62.3 | 62.1 |

மூலங்கள்: இலங்கை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தரவுகளும் ப.நா.நிதியத்தின் அலுவலர்களின் மதிப்பீடுகளும்

1/ கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்

2/ மத்திய அரசின் படுகடன், அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் மற்றும் ப.நா.நிதியத்தின் வெளிநின்ற கொடுகடனை உள்ளடக்குகின்றது. 2019இற்கான பூர்வாங்கத் தரவு 2020இல் ஒப்புதலளிக்கப்பட்டு பதிவுசெய்யப்படுகின்ற மூலதனச் செலவினங்களுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு நிதியிடப்பட்ட கடன்களின் காசுப் பகிர்ந்தளிப்புக்களை உள்ளடக்குகின்றது.